REGD No M. 4642

திராவிட நாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10. | 12—8—51 | இதழ் 7.

அவர் தந்த சவுக்கடி!

அரசியல் சுதந்திரத்தை அடைந்த றகு, சர்க்காரிலும் காங்கிரஸ் மிட்டிகளிலுமுள்ள காங்கிரஸ் ாரர்கள் அதிகாரப் பித்துப் பிடித்த ர்களாகி விட்டதோடு, கிராம வாசிளையே அடியோடு மறந்து விட்டார் ள்.

காங்கிரசினிடமிருந்து பொது மக்ள் எவ்வளவோ எதிர்பார்த்தார்கள், ஆனால் ஏமாற்ற மடைந்தனர்.

"உணவு தானியமோ, குடிக்கத் தண்ணீரோ, வாழ்க்கைக்கு வேண்டிய மற்ற வசதிகளோ இல்லாமல் மக்கள் தவிக்கிறார்கள்.

முக்கிய இடங்களில் கஞ்சித் தொட்டிகளை வைத்து வேலையில்லாது திண்டாடு கிறவர்களுக்கு ஜீவனோபாயத்திற்கு வழி செய்வதற்காக வேலை கொடுக்க வேண்டும் என்று நான் செய்த கோரிக்கைகளை யெல்லாம் சர்க்கார் கவனிக்கவில்லை.

சில இடங்களில் பட்டினிச் சாவுகள் இருந்து வருகின்றன.

உணவு தானியம் தரும் விஷயத்தில் பம்பாயும், பீகாரும் தனிச் சலுகை அளிக்கப்படும் போது, அதே உணவில் சென்னை ராஜ்யம் மாத்திரம் உதாசீனம் செய்யப்படுகிறது.

முக்கிய இடங்களில் கஞ்சித் தொட்டிகளை ஆரம்பிக்கச் சென்னை அரசாங்கம் தன் நிதியிலிருந்து எதுவுமே செலவழிக்கவில்லை.

கள்ள மார்க்கெட் காரர்களுக்கும், லஞ்ச ஊழல் மிகுந்த அதிகாரிகளுக்கும் உதவ, காங்கிரஸ்காரர்கள் தங்கள் செல்வாக்கைப் பயன் படுத்தி வருகிறார்கள்.

நீதியும் நியாயமும் கிடைப்பது அரிதாகி விட்டது இந்த ஆட்சியில்!

சாதாரண மக்களும் காங்கிரஸ் காரர்களை வெறுப்போடு நோக்கி, வெறுத்துப் பேசுகிறார்கள்.

*   *   *

சிறையிலே உள்ள கைதிகளுக்கு குற்றம்செய்தாலும், செய்யாவிட்டாலும், மூன்று மாதங்களுக்கொரு முறை, ஒரு குறிப்பிட்ட நாளில், கசையடி தருவார்கள்!

கதறக் கதறச் சவுக்கால் அடிப்பார்கள்! அவர்கள் படும் வேதனை கண்டு சிரிப்பார்கள்!

அடியால் ஏற்படும் புண்கள் ஆறுவதற்கே மூன்று மாதங்களுக்கு மேலாகும்! அதற்குள் மீண்டும் கசையடி! சுளீர் சவுக்கடி!

கைதிகள் அத்துமீறி, பலாத்காரச் செயல்களில் ஈடுபடாமலிருக்க, இந்த சவுக்கடி தர்பார்!

இங்கல்ல, ஹங்கேரியில்! இப்பொழுதல்ல, பல ஆண்டுகளுக்கு முன்னால்!

மூன்று மாதங்களுக் கொருமுறை சவுக்கடி! — கைதிகளுக்கு, சர்க்காரால், ஹங்கேரியில்!

இங்கேயும், சில குறிப்பிட்ட சம்பவங்களில் சவுக்கடி தரப் படுகிறது,

மேலே காட்டியுள்ளவை, காங்கிரசுக்கு விழும் சுளீர் சவுக்கடிகள்! முன்னாள் அமைச்சர், ஓ. பி. ராமசாமியார் கொடுத்தவை, ஹங்கேரி கைதிகளுக்கு கிடைத்ததுபோல!

ஹங்கேரிக் கைதிகளுக்கு, மூன்று மாதத்திற்கொரு முறை தண்டனை தர வேண்டிய சர்க்கார் சவுக்கடி தந்தது.

ஆனால் காங்கிரசுக்கு, கட்டியணைக்க வேண்டியவர்களே சவுக்கடி தருகிறார்கள்.

மூன்று மாதத்திற்கொரு முறையல்ல, தினந்தினம்!

ஓமாந்தூரார் மட்டுமா? பலர், பல இடங்களிலிருந்து சவுக்கடி கொடுத்துக் கொண்டேயிருக்கின்றனர்

கிருபளானி, ரங்கா, பிரகாசம், கித்வாய், ஜெயின், இப்படிப் பலர். சவுக்கு தம் கைக்கு வரும் நாளை எதிர் பார்த்திருப்போரும் ஏராளம்.

ஓமாந்தூராரும் அடிக்கடி சவுக்கடி தருகிறார். இந்த முறை விழுந்த அடி' பலமானது, பல ஆறாத புண்களை உண்டாக்கக் கூடியது!

அச்சவுக்கடி தாங்காமல் அலறுகிறார் காமராஜர். இருந்தாலும் விழுந்த அடி, பெரும் புண்களை உண்டாக்கிவிட்டது. அவைகளை ஆற்ற முயல்கிறார் காமராஜர். அதற்குள்ளேயும், ஓமாந்தூராரின் அடுத்த கசையடித் திருவிழா நடக்காமலா போகும்?

✲

★ களிப்பும், கவலையும் ★

காலத்துக்கு உதவாத பழைய வழக்கங்கள் எல்லாவற்றையும் வழக்கு மன்றம் ஏற்றுக்கோள்ள வேண்டிய அவசியமில்லை.

சென்னை நீதிபதி பஞ்சாபகேசர் ஒரு வழக்கில், தந்துள்ள தீர்ப்பிலே உள்ளது, இது.

மூட எண்ணங்களைக் காட்டி, சட்டத்தை வளைக்க முடியாது.

மௌடீக பழக்கங்களுக்கு நீதி தலை சாய்க்க முடியாது.

நீதி, அறிவுக்கு அரணாக இருக்குமே தவிர, மூட மதிக்கும் கேடயமாகக் கூடாது.

நீதிபதி இதனைக் காட்டியுள்ளார். படித்து, நாம் பரவசமடைகிறோம்.

சட்டத்தின் முன் சம்பிரதாயம் தலைவணங்க வேண்டும் என்று நீதி தேவர்கள் தீர்ப்பளிக்கிறார்கள் என்கிறபொழுது பகுத்தறிவொளி பரப்பும் பணியினைத் தாங்கி பவனி வரும் நமக்கு முகத்திலே மலர்ச்சி, உள்ளத்திலே களிப்பு, உதட்டோரத்திலே குறுஞ்சிரிப்பு தோன்றச் செய்கிறது!

சட்டம், இருள் மதித் திட்டத்தை இடித்துத் தள்ளும் என்று எண்ணுகிற பொழுது புன்னகை பிறக்கிறது ஒரு கணம், ஆனால் அடுத்த கணத்திலேயே பெருமூச்சு!

களிப்பு முதலில், கவலை பின்னர் தொடர்கிறது, அதனையொட்டியே!

ஏன் என்பீர்கள்—காரணந்தெரிந்தால், களிப்பு, போய் கவலை வந்து சேரும்.

* * *

ஒரு சமுகத்தில் நிலவிடும் மூட நம்பிக்கையின் காரணமாக தங்கள் பெயர்களைக் கூற மறுத்ததால், 28 லட்சம் பெண் வாக்காளர்கள், வாக்காளர் பட்டியலிலிருந்து விலக்கப்பட்டார்கள்.

சென்னை நீதிபதி தந்த தீர்ப்பினைக்கண்டு களித்தோம். அதே தேதியில், இந்த சேதியும் வந்திருக்கிறது. இதனை பிரதம தேர்தல் கமிஷனர் சுகுமார்சேன் அறிவித்துள்ளார். இதனைக் கண்டு கவலை நம்மைக் கட்டித் தழுவுகிறது.

பெயரைச் சொல்வது கூடாது, இப்படியொரு மூடக் கொள்கை. அதனால் ஒருவர், இருவரல்ல, இருபத்தெட்டு லட்சம் பெண்கள் வாக்குரிமை இழந்து விட்டனர்.

மூடக் கொள்கையின் முரட்டுப் பிடியிலே எப்படி மாட்டித் தவிக்கிறார்கள் என்பதற்கு இதை விட வேறென்ன சான்று வேண்டும்?

நீதி மேடை, மூடக் கொள்கைகளின் நர்த்தன அரங்கமாகா[...] என்று நீதிபதி பேசுகிறார்.

மூடக் கொள்கையை எதிர்த்[...] தீர்ப்பும் வழங்கியுள்ளார்.

அந்த வழக்கு என்ன தெ[...]யுமோ? கணவனை யிழந்த காரிகை[...] தன் கணவன் இறந்து ஓராண்[...] முடியாததால், தன்னை வீட்[...]லேயே விசாரிக்கவேண்டும் என்[...] கேட்டிருந்ததை, மறுத்து விட்டார் நீதிபதி.

தி. மு. க. மாநில[...]

1. மாவட்ட நன்கொடைக்கான சீட்டுகள் அனுப்பப்பட்டு விட்டன.
2. வனப்புள்ள மூவர்ண விளம்பரத்தாள்கள் அனுப்பப்பட்டு விட்டன[...]
3. வேண்டுகோள் மடலும் அனுப்பப்பட்டு விட்டன.

வடாற்காடு மாவட்டத்துக்காக ரூ. 1000
மதுரை மாவட்டத்துக்காக ரூ. 1000
தென்னாற்காட்டு மாவட்டத்துக்காக ரூ. 500

முறையே, திருப்பத்தூர், திண்டுக்கல், திண்டிவனம் மாநாடுகள் மூலம் தரப்பட்டாகிவிட்டது. நன்றி உதவியாளர்களுக்கு.

மற்ற மாவட்டங்கள்? விரைவில் எதிர்பார்க்கலாமா!

அருள் கூர்ந்து விரைவில் அனுப்பக் கோருகிறேன், பணம் மட்டுமல்ல, மாநில மாநாட்டுக்கான சீரிய திட்டங்களையும்!

மாநாடு, கண்காட்சி, எவ்வண்ணம் நடைபெற்றால், எழிலும் பயனும் சிறந்து விளங்கி, நமது கழகக் குறிக்கோளுக்கு வெற்றி தேடித்தர உத[...]வும், என்பது குறித்து, ஆர அமர யோசித்து, ஒருவருக்கொருவர் கலந்து பேசி, எனக்குத் தங்களின் மேலான கருத்துக்களை அனுப்பிவைக்கக் கேட்டுக் கொள்கிறேன்.

தி. மு. கழகம், ஜனநாயகக் கோட்பாட்டை நம்பி நடத்தப்படுவது—எனவே கழகத் தோழர்கள் அனைவருடைய அறிவுரையும் தேவை.

அதே போல, ஜனநாயகம் வலிமையும் பொலிவும் பெறவேண்டு[...]மல்லவா, அதற்கு, உங்கள் உயரிய யோசனைகளுடன், அவைகளை உருவாக்கத் தேவைப்படும் பணமும், நிச்சயமாகத் தேவை.

மாவட்டச் செயலாளர்கள், உங்களைக் கேட்கும் போது, மாநில மாநாட்டின் மாண்பு நமது உதவியைப் பொறுத்திருக்கிறது என்பதை உணர்ந்து உள்ள மலர்ச்சியுடன் உதவித் தொகையைத் தந்து ஊக்கமளியுங்கள்!

ஆளவந்தார்கள் கூர்ந்து கவனிக்கிறார்கள், குழந்தைப் பருவத்தில் இருக்கும் கழகமா, மகத்தான முறையிலே மாநில மாநாடு நடத்தப் போகிறது! எப்படி?—என்று.

விதவை வெளியில் வரக்கூடாது
ப்படியொரு சம்பிரதாயம்.

இதனைச் சட்டமும், நீதியும் சுட்
ரிக்கக் கண்டு, களிப்பு! ஆனால்
ந்த வரிசையிலே, பெண்கள் தங்
ர் பெயர்களையே சொல்லக்
டாது என்பதும் ஒன்றாகத் தெரி
றது! அதனால் இருபத்தெட்டு
ட்சம் பேர் உரிமையை இழந்து
ட்டார்கள்! இதனை தெரிவிப்பவர்
தர்தல் கமிஷனர் சுகுமார் சென்.
ஆகவே நெஞ்சிலே குடியேறி விட்
டது, கவலை!

இங்கு சம்பிரதாயம், சட்டத்தை
வென்று விட்டது! மூடமதி, முடி
சூடிக் கொண்டுவிட்டது!

ஆகவேதான் களிப்பும், கவலையும்
ஒன்றை யொன்று பின்தொடர்
கிறது.

மூடக் கொள்கைகள், எவ்வளவு ஆழமாகப் பதிந்து விட்டன பாருங்கள். தங்கள் பெயர்களையே சொல்லக் கூடாது என்று நம்புகிற அளவு மக்களும் இருக்கிறார்கள். அவர்களை யும் தாங்கிக் கொண்டிருக்கிறது நாடு!

தங்கள் பெயர்களைச் சொல்லக் கூடாது என்று நம்புகிற பெண்கள் இன்னமும் பீஹார், உத்தரபிரதேசம், மத்திய பாரத், ராஜஸ்தான், விந்திய பிரதேசம், ஆகிய இடங்களில் இருக்கிறார்கள்!

நம் நாட்டில் கணவன், மற்றும் பெரியவர்கள் பெயர்களைச் சொல்ல மாட்டார்கள். அதுவும் மரியாதை யென்று காரணங்காட்டி! இவர்களோ, விசித்திர புரியிலே ஊர்வலம் வருகிறார்கள். கணவன் பெயரைச் சொல்லியிருக்கிறார்கள்! தங்கையின் பெயரையும் சொல்ல மறுக்கவில்லை. ஆனால் தங்கள் பெயர்களைக் கூறவில்லை!

இவர்களுக்கு, இந்த வகையில் இளைத்தவர்களல்ல, நம்மவர்கள்!

அவர்கள் தங்கள் பெயரைச் சொல்லவில்லை. இங்குள்ள பெண்கள் கணவன்பெயரைச்சொல்லமுடியாததால், எத்தனை வேடிக்கைக் கதைகள் தினந்தினம் நிகழ்கின்றன!

விதவை வெளியில் வரக்கூடாது என்ற சம்பிரதாய திட்டத்தை நீதிபதி தடுத்துவிட்டார்.

பெயர் சொல்லக்கூடாது என்ற திட்டத்தை, நீதியோ, சட்டமோ, எதுவுமே அசைக்க முடியவில்லை.

ஆகவே, களிப்பும், கவலையும் கலந்து. கலந்து வருகிறது!

* * *

பகுத்தறிவு பரப்பும் பணியிலே நாம் ஈடுபட்டு, பணியாற்றிடத் தொடங்கி ஆண்டுகள் பல உருண்டு போயின.

அதற்கேற்ற பலனும் ஏற்பட்டுத் தானிருக்கிறது.

பஞ்சாபகேசரின் தீர்ப்பு, நாம் பட்ட பாட்டின் அறுவடைதான்!

இருந்தாலும், சமூகம் இன்னமும், ஒளி மழுங்கிய தங்கக் கிண்ணியாகத்தானிருக்கிறது.

மூடக் கொள்கைகள் இன்னமும் முறியடிக்கப் படாமல் இருக்கின்றன. குற்றுயிரும், குலையுயிருமாய், சில, குருட்டுக் கொள்கைகள் ஊசலாடிக் கொண்டிருக்கின்றன.

அவைகளைக் காணும் பொழுது, நாம் சமூக சீர்திருத்த பணியை மேலும் செய்ய உறுதி கொள்கிறோம்.

ஈரோட்டில் சென்றவாரம் சமூக சீர்திருத்த மாநாடு கூடிற்று. அதில் இந்த எண்ணந்தான் நடமாடிற்று.

நாம் பாடுபட்டோம். பலன் கண்டோம். களிப்புதான், இருந்தும் தொண்டு இன்னமும் வேண்டுமென்கிறது சமூகம்.

பட்டை நாமம் பறந்தது. கட்டு விபூதி குலைந்தது!

பஜனை குறைந்தது. பாராயணம் நின்றது. புராணப் பிரசங்கிகள் அற்றுப் போயினர்.

முதல் மாநாடு

மாற்றுக் கட்சிகளெல்லாம், கன்சிமிட்டி இதுகளாவது பெரிய அளவிலே, சென்னையிலே மாநாடு நடத்துவதாவது!—என்று கேலி செய்யும் போக்கிலே உள்ளன.

கண்ணீர்த்துளிகள் நாம்! நமது மாநில மாநாடு, கண்ணீரின் வலிமையை விளக்கும் காட்சியாக இருக்கவேண்டும்.

நமது சிந்தனை, சொல், இவை செயல் வடிவு பெற, சீரிய பயன்தர, வழிவகை வகுக்கும் மாநாடாக இது அமையவேண்டும்.

மாநில மாநாடு—இது நாள் வரை நாம் ஆற்றியுள்ள பிரச்சாரப் பணியின் மாண்பினை நாடு அறியச்செய்யும் எழிலோவியமாகவேண்டும்!

மாநில மாநாடு—நமது மனக்கண்முன் தோன்றிய வண்ணம் இருக்கும் திராவிட நாட்டை நாம் அடைவதற்கான வழிவகை தீட்டித்தரும் பாசறைப் பணிமனையாக வேண்டும்.

பாதை வகுத்தாக வேண்டும், இலட்சிய புரிக்கு!

பயணத்தைத் துவக்கியாக வேண்டும்!!

மாநில மாநாடு நமது கூட்டு உணர்ச்சி, கூட்டு முயற்சி, இவற்றின் வடிவம்!

மாநில மாநாடு நமக்குப் புதிய நம்பிக்கை! எழுச்சி! முயற்சி! தரும் விதமாக இருத்தல் வேண்டும்!

நாடு புதிய திட்டம் தந்தனர் என்று பூரிக்கவேண்டும்.

இதற்கான சீரிய யோசனைகளைத் தாருங்கள்!

திட்டங்களைத் தயாரியுங்கள்!

திரண்டு வாருங்கள்!

வருவதற்கு முன்பு, மாநில மாநாடு சிறப்புற நடைபெறுவதற்கான பண உதவியை அனுப்பிவையுங்கள்.

அன்பன்,

அண்ணாதுரை.

ஆலயங்களில் விழா, வேடிக்கையில் மக்கள் எண்ணிக்கை குறைந்தது.

மக்கள் வாழ்வில் புரோகிதம் புகுந்து வேலைசெய்த போக்கு முற்றிலும் மாறுபட்டது.

புரோகிதனில்லாத திருமணம், வைதிகனில்லாத சமூகச் சடங்குகள் நடக்கத் தொடங்கின.

மக்கள் எண்ணத்திலே புரட்சியும், நடத்தையிலே நல்ல மாற்றமும் ஏற்பட்டுள்ளன.

சாதி வெறி தலைதூக்கியிருக்கவில்லை. மத மயக்கமும் குறைந்துதான் உள்ளன.

இவை மட்டுமல்ல, சர்க்காரும் சட்டம் போட்டுக் கூட, மூடக் கொள்கைகளை ஓட ஓட விரட்டியிருக்கிறார்கள்.

பெண்ணுரிமைக்கு சட்டம்! இருதார தடுப்புச் சட்டம் போட்டு, தேவரும், மூவருமே, இன்றிருந்தால் குற்றவாளிகள் என்றாக்கிவிட்டார்கள்!

கோயில்கள் நிர்வாகத்திலும் சர்க்கார், கணக்கு கேட்கத் தயங்கவில்லை.

ஆலயங்களிலே தாழ்த்தப்பட்டோர் நுழைந்தனர்.

இனாம்தாரிகள் என்ற பெயரில், குனியாது வளையாது குந்திக்கிடந்து தம் வாழ்க்கையை நகர்த்திடும் சமூக வஞ்சகர்களையும் விடவில்லை.

வருந்துகிறோம்

காஞ்சிபுரம் மறுமலர்ச்சிக் கழகச் செயலாளரும், முன்னேற்றக் கழகப் பணிகளில் முன்னின்று காரியமாற்றும் செயல் வீரரும், இயக்கத் தோழர்களின் இதயத்தில் தனது இயக்கப் பணியால் நீங்காத இடம் பெற்றவருமான அருமைத் தோழர் டி. சபாபதி அவர்களின் துணைவியார் தாங்கோனியம்மை 5–8–51ல் இயற்கையெய்திய செய்தி நம்மை திடுக்கிட வைத்தது. துணைவியாரின் பிரிவால் வாடும் தோழருக்கும், அவர் குடும்பத்தாருக்கும், ஆறுதல் கூறுகிறோம்.

இப்படி மாற்றங்கள் ஏற்பட, வழி வகுத்தது, நம் உழைப்பு — நமது போராட்டம் என்கிற பொழுது களிப்புத்தோன்றுகிறது.

எதிர்ப்பு புயலென வீச, ஏசல்கற்கள் இடையிடையே வந்து விழ விழ, உற்றார், பெற்றாரின் தூற்றல் பள்ளங்களில் இடறி இடறிவிழுந்து எழுந்து, பகுத்தறிவு கோலேந்தி தட்டுத் தடுமாறி நடந்து வந்துவிட்டோம்.

இப்பொழுது பாதையில், பாதகப் படுகுழிகள் அதிகமிருந்தாலும், நாம் பவனி வருகிற அளவு நெஞ்சுரம் பெற்றிருக்கிறோம்!

பாதை கொஞ்சம் திருந்தியிருந்தாலும், பயணம் முடியவில்லை!

ஆகவே, தான் சமூக சீர்திருத்த மாநாடுகள் கூட்டுகிறோம்.

இந்த நேரத்தில், தொடக்கத்தில் சொன்ன இரண்டு நிகழ்ச்சிகளையும் நினைவில் கொண்டுவர வேண்டுகிறோம்.

நீதி, மூட நம்பிக்கையை எதிர்க்கிறது!

ஆனால், மூடமதிக் கொள்கைகளை விரட்டி, சமூகத்தைச் செப்பனிட சட்டம் மட்டும் போதாது. அதனை நடைமுறையாக்குகிற மனப்பண்பு, மக்கள் உள்ளத்திலே மலரவேண்டும்.

அப்பொழுதுதான் சமூகம், உருக்கப்பட்டு, புதிய உருவில் அமைக்க முடியும்.

அதனால்தான், நாம், முப்பதாண்டுக்கு மேலாக, சமூக சீர்திருத்த பிரச்சாரம் புரிகிறோம்.

சமூகம் உருகும் உலோகம்—சட்ட நெருப்பு மட்டும் போதாது, உருக்க! பிரச்சார ஜுவாலையும் வேண்டும்!

மூடக் கொள்கைகளின் இருட்டு நிலைமையை எடுத்து விளக்கி வருகிறோம்.

பிரச்சாரம் பல இதழ்கள் கொண்ட ஒரு மலர்.

அம்மலரின் மணத்தால் தான், சமுகத்தின் முடைநாற்றம் சாகடிக்கப்பட வேண்டும்!

சமூக சீர்திருத்தப் பிரச்சாரத்திலே புதியதொரு அத்தியாயத்தைப் பிரித்து வைத்திருக்கிறோம்.

இதுவரை, உலகைத்திருத்த, தங்களை அர்ப்பணித்த உத்தமர்களை, மக்கள் கவனத்திற்குக் கொண் வருகிறோம்.

அவர்களின் இலட்சிய விளக் தருகிறோம்.

அதனை நிறைவேற்ற அவர் பட்ட அவதிகள், ஆட்சியா வீசிய அடக்குமுறைகள், சமூ இழைத்த இன்னல்கள் இவைக எடுத்து விளக்கி, நம் நெஞ்சி நம்பிக்கையை ஊற்றெடுக்கச் செ கிறோம்!

சமூக சதிகாரர்களுக்கு, அ உத்தமர்கள் அடைந்த வெற்றி ஒ எச்சரிக்கை! நமக்கோ, நம் இ யத்தை குளிர்விக்கும் இன்பத்தெ றல்!

அவர்கள் அனுபவித்த துன்ப களைக் காணும் பொழுது, நமக் வரும் இடுக்கண்கள் வெறுந்து களே எனப் பேசிடுகிற துணி பிறக்கிறது!

அவர்கள் பெற்ற வெற்றிகளோ, நமக்கு உணர்ச்சியையும் ஊக்கத்தை விருந்தாக்குகின்றன.

திருந்தாத சமூகத்தைப் பார் கிற பொழுது கவலை பிறந்தாலும், உலகைத் திருத்திய உத்தமர்கள் காட்டும் பாதை தெரிகிற பொழுது களிப்பு நம்மையறியாமல் வருகிறது.

* * *

ஒரே வாரத்தில் இரண்டு இடங் களில் நம் தோழர்கள் இரண்டு மாநாடுகளை நடத்திக் காட்டியுள்ளனர்.

திண்டுக்கலில், எழுத்துரிமை பேச்சுரிமை மாநாட்டைநடத்தினர்

ஈரோட்டில் சமூக சீர்திருத்த மாநாட்டை வெற்றிகரமாக்கியுள்ளனர்.

திண்டுக்கல் மாநாடு என்றவுடன் தோழர் முத்துவை நம்மால் மறக்க முடியவில்லை. அவர் ஓயாதுழைத்து மாநாட்டை வெற்றிகரமாக முடித்தார். வரவேற்புக்குழுத் தலைவர் வி. எஸ். எஸ். மணி, மற்றும் தோழர்கள் சமதர்மம், பிச்சை, தங்கவேலர், வீரராசன், லட்சுமணன், நாச்சியப்பன், அங்குச்சாமி ஆகியோருக்கும், இன்னும் திராவிடக் காளையர் அனைவருக்குமே நம் பாராட்டுதல்கள் சேரட்டும்.

11-ம் பக்கம் பார்க்க

நோயாளிகள்

★

நம் மந்திரிகள் மதி குறைந்தோர்! மதி நிறைந்தோர்!

நாட்டு மக்கள் நாளும் இப்படிப் பேசக் கேட்கிறோம்.

நாட்டில் நிலவும் கொடுமைகள், மந்திரிமார்களின் மதி மந்தத்திற்கு வட்டம் வீசுகின்றன.

அவர்கள் அமர்ந்து செல்லும், மருகு கலையாத மோட்டாரும், அதிலிருந்து இறங்கிச் செல்லும் மாளிகையும், அவர்களின் நிதி நிலைமையைக் காட்டும், கணக்கே!

நம் மந்திரிகள் மதிவலிமை குறைந்தோர் என்று மட்டும் எண்ணினோம். அதுவும் தவறு என்கிறார்கள், மதிவலிமை மட்டுமல்ல, உடல் வலிமையும் குறைவு என்று கூறுகிறார்கள்!

மந்திரிகள் உள்ளத்திலே காய்ச்சல்; ஆகவே உருப்படியான திட்டங்கள் தரமுடியவில்லை. உளறல்களே திட்டங்களாகின்றன. பிதற்றல்கள் சட்டங்களாகின்றன என்று எண்ணினோம்.

உள்ளம் என்ன, உடலும் அப்படியே! இப்படிக் கூறுகிறார்கள் நாடாளும் நம் அமைச்சர்கள்.

மந்திரிகள் மதிநோய் கொண்டவர்கள் என்றெண்ணினோம். ஆனால் அவர்கள் உடல் நோயும் ஒருங்கு சேர, இரு நோயாலும் அவதிப்படுகிறார்கள்.

மந்திரிகள் நோயாளிகள், ஆகவே அவர்கள் பாராளுமன்றம் செல்வதை விட மருத்துவ மனைக்கே அடிக்கடி போகிறார்கள்!

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்! ஆனால் அச்செல்வம் தவிர மற்ற எல்லா செல்வங்களும் பெற்று மகிழ்கிறார்கள், நம் மந்திரிகள்.

நாட்டின் நோய் தீர்க்க வேண்டியவர்கள், மந்திரிகள். ஆனால் அவர்களோ, நோயாளிகள்!

நாட்டின் பிணிக்கு, மருந்து தர வேண்டியவர்கள் அவர்கள். எனினும், அவர்களே, தாங்கள் அருந்த மருந்து தேடுகிறார்கள்!

பிணி, மூப்பு, சாக்காடு ஆள் பார்த்து வருவதில்லை.

மந்திரியானாலும் வரும். மாடோட்டும் மன்னார்சாமியானாலும் வரும்!

நமக்கு இது தெரியும். இருந்தும் ஏன் இந்த நோயாளி மந்திரிகளை எண்ணி நொந்து கொள்கிறோம் என்றால், அதுதான் நாம் நினைத்தாலும் நெஞ்சு வேகக்கூடியது!

நோய் வருகிறது, மந்திரிக்கு! வரவேண்டும் என்று விருப்பமில்லை. வரக்கூடாதென்றே எண்ணுகின்றோம். அதற்காக அல்ல, நாம் வருந்துவது!

சாவு, கூட வரும், மந்திரியென்று விட்டுவிடாது! அறிவோம். பட்டேல் மறைந்ததைப் பார்த்து, வருந்தியவர்கள்தான் நாம்.

அவை, இயற்கை யென்பதும் தெரியும். எவருக்கும் ஏற்படக் கூடியவை யென்பதும் புரியும்.

இருந்தும் வருந்துகிறோம். ஏன் தெரியுமோ?

நமக்கெல்லாம் நோய் சொல்லிவிட்டு வருவதில்லை.

இந்த, மந்திரிமார்களுக்கோ சொல்லிவிட்டு வருகிறது! அதுவும் வெளிநாடுகளுக்குச் செல்கிறார்களென்றால், பிணிதானே வந்து பிடித்துக் கொள்கிறது! உள்நாட்டிலே இருக்கும் பொழுது கூட, அப்படியொன்றும் நோயால் மெலிந்திடுவதில்லை.

நோய் வரட்டும், மந்திரிகளுக்கு. அதுவும், வெளிநாடுகளுக்குச் செல்கிற பொழுதே வரட்டும். நமக்கு கவலையில்லை.

ஆனால், அந்நோய் தீர்க்க, மருத்துவம் பார்க்கமுடியாதவர்களா, மந்திரிகள்! சே, அப்படி சொல்லிவிட முடியுமா?

நாம், நமக்கு வருகிற பிணிகளுக்கு, நமக்குத் தரப்படுகிற ஊதியத்திலிருந்து தானே மருந்துண்கிறோம். வேலை பார்க்குமிடங்களிலேயா, மருத்துவத்திற்குப் பணந் தருகிறார்கள்?

தொழிலாளித் தோழர்களுக்கு இந்த வசதி செய்யப்பட வேண்டியது அவசியமாயினும், சரிவர செய்யாமல் தவிக்கவிடுகிறார்கள், இந்த சர்க்கார்.

மந்திரிகள் என்ன அன்னக்காவடிகளா? இல்லை, இல்லை!

நம் மந்திரிகள் மதி குறைந்தவர்களாக இருக்கலாம். ஆனால் நிதி குறைந்தவர் என்று யார் கூறுவர்!

அவர்களுக்கு, இந்த சர்க்கார் வைத்திய உதவி செய்வதற்காக ரூ 19654—6—0 செலவு செய்திருக்கிறது.

இப்படிக் கணக்கு காட்டப்பட்டிருப்பதைக் காணும்பொழுது தான் நமக்கு கவலை அதிகரிக்கிறது.

நாம் தொடர்ந்து பத்திரிகைகளைப் படித்து வந்தால், இந்த வேதனை இரட்டிக்கும்.

முதலில், மந்திரியாரின் உடல்நிலை யென்ற தலைப்பில் அவருக்கு அடிவயிற்றிலே வலி, அடிக்கடி குமட்டல், வாந்தி, இருந்தாலும், செக்ரட்டேரியட்டுக்கு போகிறார். இன்னும் ஒரு மாத காலத்திற்குள் அவர் லண்டன் மருத்துவ நிலையத்திலே சிகிச்சை பெற்றாகவேண்டும் என்று டாக்டர் கூறுகிறார் என்று அறிக்கை வரும்.

இரண்டு வாரங்கள் கழித்து, அதே மந்திரியார், லண்டனில் நடைபெறும் மாநாட்டில் கலந்து கொள்ளச் செல்கிறார். அவர் திரும்பிவர இன்னும் இரண்டு மாதகாலம் ஆகும் என்று மற்றொரு அறிவிப்பைக் காணலாம்.

மந்திரிகள், நோயாளிகளாக இருக்கட்டும். மருத்துவம் பார்க்கட்டும்! அதற்கு நாம் பணம் தர வேண்டும் என்று எண்ணும் பொழுது தான் நம்மால் அந்தக் கொடுமையைத் தாங்க முடியவில்லை.

நல்ல வேளை, அயல்நாடு செல்லும் மந்திரிகள், தங்கள் நோய் தீர மட்டும் பணம் பெறுகிறார்களே! அத்தோடு நின்றார்களே கருணையோடு, கண்ணியத்தோடு! அது போதும்!

இவர்கள், மந்திரிகளாக இருக்கிறார்களே என்பதற்குத்தான், பணம் கொட்டியளக்கிறார்கள். நோயாளிகளாக இருப்பதற்குமா பணந்தர வேண்டும்! ஐயோ!

★

திராவிடநாடு

ஞாயிறு] 12—8—51 [காஞ்சி

அந்திய காலம்.

★

அவனுக்கு ஈளை கட்டியிருக்கிறது.

கண்கள் சுழல ஆரம்பித்துவிட்டன.

நாக்கு குழறத் தொடங்கிவிட்டது.

டாக்டர் கையை விரித்துவிட்டு, காரில் ஏறிவிட்டார்.

உற்றார், பெற்றார், ஊரிலுள்ள மற்றவர் எல்லோரும் சுற்றி நிற்கிறார்கள்.

ஊரிலிருந்து வரவேண்டியவர்களுக்குத் தந்தியும் கொடுத்தாகிவிட்டது.

மேளக்காரனும், தாளக்காரனும் அழைத்துவர ஆள் அனுப்பலாமா என்று வீட்டுக்குடையார் யோசிக்கிறார்.

படுக்கையிலேகிடக்கும்நோயாளி பேசத் தொடங்கினான், தட்டுத்தடுமாறி!

இருப்பது இரண்டொரு நிமிடங்கள்! இதில் ஊர்க்கதையை உளறுகிறான்!

இருக்கும் அற்பாயுளுக்குள் ஆகக்கூடியதைப் பேசுங்கள்! தங்கள் சொத்துபற்றிய உயிலில்லையெழுதிப்போடுங்கள்! என்றுவற்புறுத்தினார், அப்பொழுதுதான் அழைத்துவரப்பட்ட குடும்ப வக்கீல்.

ஆனாலும் ஊர்க்கதை பேசினான். பிணமானான். சொந்த உயிலில் செய்யவேண்டியதைச்செய்யவில்லை!

அந்தியகாலம்—இதில் முடியக்கூடியதைப் பேசிடாமல் ஏதேதோ பேசினான். இறந்தான்!

* * *

இருப்பதோ, இரண்டொரு மணித்துளிகள்! இதற்குள் ஆகக்கூடியதைச் சொல்லாமல், பேசாமல் சாகும் நேரத்தில் ஊர்க்கதை,பேசி, உயிரைவிட்டதுபோலப்பேசுகிறார், அவர்.

அவரோ, நாட்டின் தலைவர் குடியாட்சிகோமான், ஜனாதிபதி ராஜேந்திரர்.

அவர் நிலைமையைத் தெரிந்திருந்தும், நீளப்பிரசங்கத்திலே, காலங்கடத்துகிறார்.

பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டம் அது.

அதற்குரிய ஆயுள் மிகமிகக் குறைவு.

இன்னும் சில மாதங்களில் பொதுத் தேர்தல் வந்துவிடும். இந்த அற்பாயுளும் முடிந்துவிடும்.

அற்பாயுள் கொண்ட, பாராளுமன்றத்தின் அந்திய காலத்திலே அவர்கள் கூடினார்கள்.

பார்லிமெண்டிற்கு மட்டுமல்ல, அந்தியகாலம், ஆட்சி பீடத்தில் அமர்ந்திருக்கும் ஆளவந்தாரின்காங்கிரஸ் கட்சிக்கும் அந்திய காலந்தான்! அத்தகைய முடிவுகாலத்திலே கூடியிருக்கிறார்கள்!

அதுமட்டுமல்ல, ராஜேந்திருக்கும் அந்தியகாலந்தான் — பதவி காலத்தைமட்டும் என்று எண்ண வேண்டாம். பருவத்தாலும், வயோதிகர்தான் அவர்!

பார்லிமெண்டின் அந்தியகாலத்தில், அந்தியகாலச் சந்ததியினர் கூடினர். அந்தியகாலத் தாழ்வாரத்தில் உலவும் ராஜேந்திரர் பேசினார்.

ஈளைகட்டி இழுத்துக்கொண்டிருக்கும் நோயாளி எதைப்பேசியிருக்கவேண்டும்? இருக்கும் சொத்தைப்பற்றியோ, சொந்தக்குடும்பத்தைப்பற்றியோ சொல்லவேண்டியிருந்தால் சொல்லியிருக்கவேண்டும்.

அவன் அதைச் சொல்லவில்லை. ஊர்க்கதைகள் பேசி, அதனாலே தொண்டை வரண்டு, இரண்டு நிமிடங்கள் கழித்துச் சாகவேண்டியவன், முன்னரே மாண்டான்!

அப்பிணத்தின் கதையைப் பின்பற்றுகிறார், ராஜேந்திரர்.

பார்லிமெண்டில் அவர் பேசியுள்ள பேச்சு, நம்மை அப்படி நினைக்க வைக்கிறது.

உயிர் பிரியும் நேரத்தில், உயிலை நீட்டி நிற்கும்பொழுது, ஊர் மணியமா பார்க்க நினைப்பது?

ராஜேந்திரர் பேச்சில் உள்ளதை பற்றி ஏதும் பேசாமல், உலகத்தை பற்றிக் கொட்டியளந்திருக்கிறார்.

நாட்டின் தலைவரின் நா அசை கிறதென்கிறபொழுது நாட்டோர் நல்லது கிடைக்கும், நம் தலைவர் நம் வாழ்விற்கானவற்றை வழங்குவோர் என்றுதானே எதிர்பார்ப்பர்.

மக்கள் அதிபதி அவர். அவர் பேசுவது, சாதாரண மண்டபத்தி லல்ல—ஆட்சி இயந்திரத்தின் முடி மீது நின்று பேசுகிறார்!

அங்கே வீண்கதை பேசி, காலத்தையும், கருத்தையும் பாழாக்கவா நினைப்பர்?

அப்படியென்ன, அவர் வினோத பிரசங்கபூஷணமா,காலட்சேப கர்த்தாவா — இல்லையே! நாட்டின் தலைவர். அவரின் நா இந்த நாட்டின் சட்டசபை. அவர் குரல் இந்த நாட்டின் அதிகாரபீடம். இருந்தும் அவர் அப்படி பேசியிருக்கிறார்.

அதுவும், அந்திய காலத்தில்!—பேசும் இடம், அவருக்குரியபதவி, அவர் இருக்கும் கட்சி, கூடியிருந்தோரில் பலரின் வேலை — எல்லாவற்றிற்கும் அந்தியகாலம் — அத்தகைய நேரத்தில், இத்தகைபேச்சு ஏன்?

இங்கிலாந்தில், பார்லிமெண்டில் மன்னர் பேசுகிறார் என்றால், அது அந்நாட்டோருக்கே ஒரு பொன்னாள்—ஆட்சியாளர்களுக்கு நன்னாள்! அந்நாள் போன்றதே, ராஜேந்திரர் பேசிய நாளும்!

ஆறுதல் கூறுகிறோம்

தன்மானத் தலைநகரம் ஈரோடு—பகுத்தறிவியக்கத்தை துவக்கிய பழங்குடும்பம்—அக்குடும்பம் நாட்டுக்குக் காணிக்கையாக்கிய மணி விளக்குகளில் ஒரு திருவிளக்கு—திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரர் — செயலாற்றும் செம்மல்—தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்களின் தந்தையார் ராமசாமி அவர்கள் 5—8—51-ல் இயற்கையெய்திய செய்தி நம்மைத் துயரக்கடலிலாழ்த்தியது. தந்தையாரின் பிரிவால் வாடும் தோழருக்கும், அவர்தம் குடும்பத்தாருக்கும் நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இருந்தும், நமக்கு அந்நாள் வீண் நாளாகவே தெரிகிறது!

சம்பிரதாயம், சடங்கு, விருந்து, வைபவம், படாடோபம், கொண்டாட்டம், இவைகளிலே இந்த இரண்டுபேருக்கும் வித்தியாசம் காண்பது முடியாதுதான்!

ஆனால் அதுவா, தேவை! அந்நாளில் பேசும் பேச்சல்லவோ, நாட்டோருக்கு முக்கியம்!

ராஜேந்திரர் பேசியிருக்கிறார், அந்தியகாலத்தில்! அந்திய காலத்தில் வேண்டாத விவகாரங்கள் பலவற்றை அலசிவிட்டார்!

அவை, அவரின் பரந்த உலக அறிவைக் காட்டுகிறது. பெருமைப் படுகிறோம்! அவரின் சிறந்த இலட்சியத்தைக் காட்டுகிறது — பூரிக்கிறோம்!

இருந்தாலும், இது அந்தியகாலம்—நாட்டிலே காண்பதோ கண்ணீர் சிந்தும் கோலம்!

இந்தக் கோலத்தைக் காணும் தலைவர், கண்ணீர்மாற்ற வழிகாட்டியிருக்கவேண்டும்.

அதற்குப் பரிகாரம் சொல்லியிருக்கவேண்டும், அவர் பேச்சில்!

அவரோ, கொரிய மக்களுக்காக, வருந்தியிருக்கிறார். கொரியா நொறுங்கி வரும் நிலைகண்டு இரங்கியிருக்கிறார். அங்கே அமைதி காணத்துடியாய் துடித்திடுகிறார்!

ஜப்பான் சமாதான உடன்படிக்கை பற்றிக் காட்டியுள்ள அக்கரை மிகப் பெரிது!

பாரசீக எண்ணெய்த் தகராறு, சுமுகமாகத் தீர்ந்திட இறைஞ்சுகிறார்!

ஆசிய நாடுகளில் ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியை விரிவாக விளக்குகிறார்! அவ் விளக்கத்தை அவர் கூறும் பொழுதே பூரித்துப் போகிறார்.

நேபாளத்தின் நிலையைக் கூறுகிறார்.

ஜோர்தான் மன்னரின் கொலைக்கு வருத்தம் தெரிவிக்கிறார்.

துருக்கி, பாரசீக நாடுகளுக்கு நன்றி தெரிவிக்கிறார்.

தென் ஆப்ரிக்காவைக் கண்டிக்கிறார். கோபிக்கிறார்.

வெளிநாட்டு விவகாரங்களை அவர் பேசக்கூடாதென்பதல்ல, நாம் குறிப்பிடுவது. வெளிநாடு, உள்நாடு விஷயங்கள் யாவற்றிலும், அவர் கவனமிருக்கவேண்டும் என்பதை நாம் அறிவோம்!

ஆனால், வெளிநாட்டு விவகாரங்களிலே அவ்வளவு அக்கறை காட்டிப் பேசியுள்ள அவர், நம் நாட்டின் நிலையை அறியாதவர் போலவே பேசியிருக்கிறார்.

அந்திய காலப் பேச்சிலே, இந்த அர்த்தமற்ற சந்தங்களை நாம் எதிர்பார்க்கவில்லை.

அவன் சாகப் போகிறான் என்பது தெரிந்தவுடன் உயிலை நீட்டுகிறார் வக்கீல்! அவனோ ஊர்க்கதை பேசுகிறான்!

ஜனாதிபதியார் பேச்சிலே கண்ணீர் சிந்துவோரின் துயரம் வழிகாட்டப்படும் என்று எதிர் பார்த்தோம். ஏமாந்தோம்.

பாகிஸ்தான்மீது போர் பற்றிக் கூறியுள்ளார்.

பஞ்சாபிலே அவர்கள் நடத்திய எதேச்சாதிகார கூத்து, திட்டக் கமிஷன் பேரால் அவர்கள் எழுப்பியுள்ள தேர்தல் ஜாலம், இவைகளைப் பேசியுள்ளார்.

வெளிநாட்டு விவகாரத்தை வெளுத்து வாங்குகிறார்! உள்நாட்டு உயிர்ப் பிரச்சினைகளை விடுத்துவிட்டு ஏதேதோ பேசுகிறார்!

சாகப் போகிறவன், சங்கீதக் கச்சேரி நடத்துகிறான்! மாளப் போகிறவன், மணப் பந்தல் கட்டுகிறான்! அடுத்த கணத்திலே ஆவி பிரியப் போகிறவன், ஆகாயத்தை அளாவ கோட்டை கட்ட திட்டமிடுகிறான்!

அந்திய காலத்தின் வாயிற்படியில் நிற்கும் ராஜேந்திரர் அப்படித்தான் பேசுகிறார்.

* * *

உயிர் போகப் போகிறது! உயிலில் வேண்டுமானால் கையெழுத்திடலாம்!

அற்பாயுள் கொண்ட பார்லிமெண்ட் — இதில் எதைச் செய்யலாமோ, அதைச் சொல்லியிருக்க வேண்டும்.

அலங்காரப் பேச்சுக்கல்ல, அவர் பேச்சை நாட்டோர் எதிர்பார்ப்பது!

சம்பிரதாயப்படி நடக்கிறச் சடங்குமல்ல, ஜனாதிபதியின் பேச்சு!

நாட்டிலே இன்று நிலவி வருகிற பிரச்சினைகள் பற்றி அவர் கூறியிருக்கவேண்டும்.

பசியென்கிறார்கள் அதற்குப் பதில் சொல்லிவிட்டல்லவா, கொரியாவின் கோரத்தைப் பற்றிப் பேச நேரந்தேட வேண்டும்.

பட்டினிச் சாவு பார் என்கிறார்கள், அதற்கு வழிகாட்டி விட்டல்லவா, பாரசீக எண்ணெய்க்கு, பக்குவம் சொல்லவேண்டும்.

தொழிலாளிகள் வேலையில்லையென்கிறார்கள், நெசவாளிகள் நூல் இல்லையென்கிறார்கள். இதற்கொரு முடிவு தந்திருக்க வேண்டாமா?

மனித சுதந்திரங்கள் பறிக்கப் படுகின்றனவே, என்று பதறுகிறார்கள்! அதற்குப் பரிகாரம் இல்லையே, அவர் பேச்சில்!

பட்டினி என்று பதறுகிறார்கள்! துணியில்லை யென்று துடிக்கிறார்கள்! தொழில்கள் செழிக்க, வேண்டிய வசதிகள் செய்யவில்லையென்று குறை கூறுகிறார்கள்! நூல் இல்லையே என்று நெய்பவர்கள் மனம் நோகிறார்கள்! உரிமை பறிபோகிறது என்று நாட்டோர் எரிமலையாகிறார்கள்!

ஆனாலும், ஜனாதிபதி அதற்கு வழி காட்டவில்லை.

நம் திராவிட நாட்டைப் பற்றிய வரையில், உணவுப் பிரச்சினை மிக மிகப் பயங்கரமாகிக் கொண்டு வருகிறது.

அதுபோலவே, நூலில்லாக் கொடுமையும் வளர்ந்தபடியே உள்ளது.

இது பற்றி அவர் கூறியவை, நமக்கு வியப்பைத் தருவது மட்டுமல்ல, இத்தகைய வீணுரை வழங்குவோர் கீழிலும், இந்த நாடு, இன்னமும் இருக்கிறதே என்ற கவலையே அதிகரிக்கிறது!

நாட்டின் உணவு நிலைமை, அரசாங்கத்திற்கு மிகக் கவலைதருகிறது. நாட்டின் பல பாகங்களிலும், முக்கியமாக பீகாரில் பஞ்சம் வருமோ என்ற ஆபத்திருந்து வருகிறது.

நாட்டின் உணவு நிலைமை அரசாங்கத்திற்கு, கவலை தருகிறதாம் — கவலைப்படவேண்டியது, நாம், நாட்டிலுள்ள மக்கள்— ஆளவந்தார்களல்ல!

ஆட்சியாளர்களுக்கு ஏற்பட வேண்டியது கவலையல்ல, கவனம்! கவனம் வந்தால் தான், உணவு நெருக்கடிக்குரிய காரணங்கள் விளங்கும். காரணங்கள் கண்டுபிடிக்கப் பட்டால், அக்கேடுகளைக் கண்காணித்து நீக்கவேண்டும். கேடுகள் போக்கப்பட்டால்தான் நிலைமை சீர்படும்—நெருக்கடி தீரும்!

கையாலாகாதவனுக்கு வரவேண்டியது, கவலை!

முடியாதவன் பாடவேண்டிய முகாரியை, ஆட்சியாளர்களும் பாடுகிறார்கள்!

ஆட்சியாளர்கள் எல்லா வசதிகளும் உள்ளவர்கள். அவர்கள் கவலைப்படக்கூடாது!

பீகாரில் பஞ்சம் வரும் நிலையை அறிந்துள்ளார் ஜனாதிபதி. ஆனால் திராவிடத்தின் பரிதாப நிலை அவருக்குப் புரியவில்லை!

திராவிடத்தின் பரிதாபநிலை, எவ்வளவு விருவிருப்புடன் விரிவடைந்து வருகிறதென்பதை, உணவு மந்திரி முன்ஷியார் அருளியவரத்திலிருந்தே தெரியும்.

சென்னை ராஜ்யத்திற்கு ரேஷனில் அரிசிப் பங்கை 8-அவுன்சாக உயர்த்துவதற்காக, அதிக அரிசி ஒதுக்குவதற்கு முடியாது.

முன்ஷியார் அளித்துள்ள வரம் இது.

ஆறை, எடை கொடுக்கும்படி கேட்டனர். ஆனால் அவர் முடியாதென மறுத்துவிட்டார்.

இந்த ஆறிலே அகப்பட்டு தவிக்கும் இந்த மக்களுக்கு மார்க்கம் காட்டவில்லை. இங்கே அரிசியின்றி பட்டினிச்சாவுகள் நடக்கின்றன. ஜனாதிபதியோ ஜோர்தான் மன்னர் மரணத்திற்குதுக்கம் தெரிவிக்கிறார்.

இதுபோல, நூல் கேட்கும் மக்களுக்கு, திட்டம் தரவில்லை திருப்பிப் பேச்சு பேசுகிறார்.

கைத்தறித் தொழில் இந்நாட்டின் முக்கிய தொழில். பெரிய தொழில். ஏராளமான மக்கள் இதில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

இவை, ராஜேந்திரருக்கு மட்டும் தெரிந்த உண்மைகளல்ல — எல்லோரும் அறிந்தவையே.

அத்தொழில் செழிக்க ஆளவந்தார்கள் என்ன செய்யப்போகிறார்கள்? அதுதான் நம்முன் உள்ள கேள்வி! அவர் முன் உள்ள பிரச்சினை!

அதற்கு அவர் கூறுகிறார்!

இந்தத் தொழில் விருத்தியடைவது நூல் விநியோகத்தைப் பொறுத்திருக்கிறது.

ஆகா, கண்டுபிடித்துவிட்டார், ஜனாதிபதி, இனி கவலை தீர்ந்தது, கண்ணீர் உலர்ந்தது என்று பாடலாம், ஆடலாம் என்று தோன்றும். ஆனால், உண்மையை உணர்ந்தும், நூல் விநியோகத்தை சரியாக்கவிட வில்லை.

இந்த விநியோகத்தை விருத்தி செய்யமுயற்சிகள் செய்யப்படுகின்றன

ஒரு நாட்டின் தலைவரா, ஒரு உயிரான பிரச்சினை பற்றி இப்படிப் பேசுவது!

திண்ணைத் தூங்கி திம்மப்பன் கூறிடவேண்டியதை, நாட்டின் ஜனாதிபதி ராஜேந்திரர் கூறுகிறார்!

பட்டும் படாமலும், தொட்டுந் தொடாமலும் பேச, அவர், பிரசங்கியல்ல, இந்நாட்டின் வாழ்விலும், தாழ்விலும் பிரிக்கமுடியாத ஜனாதிபதி!

நூல் விநியோகத்தை, எப்படி, எப்பொழுது, எந்த முறையால், எந்த அளவில் உயர்த்த இருக்கிறார்கள் என்று புள்ளிவிவரந்தந்து, புண்பட்டுக் கிடப்போரிடம் புன்சிரிப்பை வரவழைக்க வேண்டியவர் அவர்.

சாகக்கிடக்கிறவன், சாவதற்குள் செய்யவேண்டியதைச் செய்யவேண்டும்! அதை விட்டுவிட்டு ஏதேதோ பேசிடுவது கண்டால், என் செய்வது?

* * *

ஊசலாடும் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு உயிலில் கையெழுத்துப்போட வேண்டும், அவன்.

அவனே, மயிலேறிப்போய், மயில் சாயலும் குயில் குரலுங் கொண்ட கோமளாங்கியொருத்தியைக் கொண்டு வருகிறேன் என்று கூவினால், ஜன்னியென்பரே தவிர, பிணமாகிறபொழுதும் மணம் வேண்டிய மகான் என்று எவரும் பாராட்ட மாட்டார்கள்!

அந்திய காலத்திலே, அருங்காரியத்தைப் பேசாமல், அகன்று, பரந்த உலகத்தைப் பற்றிப் பேசிவிட்டு, உள்நாட்டு விவகாரங்களில் மழுப்பலும், இழுத்தலும் இருந்தால் அவரை ஜாலப்பேச்சுக்காரர் என்று கூறலாமே தவிர, ஜனாதிபதியென்று எப்படிக் கூறமுடியும்?

பொதுத் தேர்தல் வரப்போகிறது, போகப் போகிறோம் நாங்கள், போகுங்காலம் வந்துவிட்டது எங்களுக்கு என்று பேசுகிற அவருக்கு போகுங்காலத்தில் எது முடியும் என்று கூடத் தெரியாதா, என்ன! அதையல்லவா செய்யவேண்டும்!

பாடை கட்ட ஆள்வரவேண்டிய நேரத்தில், மணமேடை கட்ட ஆள் தேடுவது போல, அந்திய காலத்தில் அவர் பேசுகிறார் இப்படி!

★

விளம்பர விகிதம்

★

காலம் அங்குலம் 1-க்கு ரூ. 4—0—0

அரைப்பக்கம் ரூ. 100—0—0

முழுப்பக்கம் ரூ. 200—0—0

* விளம்பரங்கள் அனுப்பும் முன் எழுதிக் கேட்டு பிறகு அனுப்பவும்.

* முன் பணத்துடன் அனுப்பப்படும் விளம்பரங்களே கவனிக்கப்படும்.

* விளம்பரங்களின் விஷயம், அளவு, காலம் இவற்றை அனுசரித்தே ஏற்றுக்கொள்ளப்படும்.

விளம்பர மானேஜர்.

விற்பனையாகிறது!

மீ. சு. இளமுருகு பொற்செல்வியாரின்

கருத்தோவியங்கள்

கருணாநிதியார் 1—0—0

அவள் 0—8—0

காதல் மணம் 0—6—0

காதலர் பண்ணை

நூல்வெளியீட்டகம்

பெரியகுளம்.

யாத்திரை

தொடர் கதை —— தில்லை-வில்லாளன்

3

அம்மாவுக்கு

பத்மா

அடக்கம் அவர்வாயைஅடைத்து விட்டது. ஆனால் அவர் முழுக்கவும் அடங்கியிருக்கவில்லை. அவரது உள் உணர்ச்சிகள் படமெடுத்தாடி விட்டன. பொன்னியின் கன்னித் தனம் சூறையாடப்பட்டுவிட்டது. என் பாதி வாழ்விலும் பழுதுவந்து சேர்ந்து விட்டது.

அவர் செய்கையை நான் கண் டிக்க வில்லை. ஆனால் அவர் முறை யைக் குறை கூறுகின்றேன். மலர் பறிக்கட்டும், கொடியை அறுக்க வேண்டாம்! பொன்னியோடு வாழட்டும். ஆனால் அவளை விபசாரியாக்கி யல்ல, உரிமையுள்ள மனைவியாகக் கொண்டு! அதை வற்புறுத்தினேன். வாழை பெருத்த வேரிலிருந்து புதிய முளையை உண்டாக்குவது போல அவரது சொந்த மனைவி நான். என் வாழ்வைப் பாழாக்கிக் கொண்டு அவருக்குப் புதிய மனை வியை உண்டாக்க சம்மதித்தேன். அவர் அஞ்சிநின்ற பொழுதும் நான் விடவில்லை. அவர் அறத்தினின்றும் வழுவி நடக்கிற பொழுது தரும பத்தினி நான் என்ன செய்வது? என் மனதில் சரியென்றுபட்டதை எடுத்துக் கூறினேன்.

என்னிடம் அவர் இனி மனைவி யென்று முறைகொண்டாடி நெருங் கக் கூடாது என்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டேன் வண்டினிடம் மலர் எதிர்ப்பு மறியல் நடத்துவ தைப்போல! ஆம் அவர் அன்று வரை வண்டாகவே நடந்துவந்திருக் கிறார். நான் வேண்டா, வெறுப்பில் தேனை மொண்டுபோக அனுமதித்த மலராகவே இருந்து வருகின்றேன். அந்த வியாபாரப் போக்கிற்கு ஒரு முற்றுப்புள்ளியை வைத்து விட் டேன். அத்துடன்விடவில்லை. அவர் பொன்னியை முறைப்படி, சட்டப் படி மணந்து வாழவேண்டும் என்று உறுதியாகத் தெரிவித்துவிட்டேன். ஆம், விழிப்பு பயமாகத்தானிருந் தது. விபரீதமான போக்கிலே தன் வாழ்க்கைத் திரும்பும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. அவர் இடை யிடையே பேசலாம் என்று முயன் றும் முடியவில்லை.

பெண்ணுலகைப்பற்றி இந்த சமூ கம் தவறாகக் கணக்குப் போட்டி ருக்கிறது. அந்தத்தப்புக்கணக்கைத் தாறுமாறாகக் கிழித்தெறிய வேண் டும்என்பது என் ஆசை. அந்தக்கால மனுவும், மாந்தாதாவும் போட்ட புள்ளி விவரங்களை அடிப்படை யாகக்கொண்டு இன்னமும் ஏமாந்து போகிறது அந்தக்கால சமூககட்டிட நிபுணர்கள் கையாண்ட கலைக்கு தவறும், பிழையும் மலிந்தது. அவர் களின் குறிப்பு சரியென்றே கொண் டாலும்காலம் மாறிவிட்டது. ஆகவே அந்தக் கணக்கிலும் மாற்றம் வந்து விட்டது என்று புரிந்து கொள்ள வேண்டும். என் கணவர் படித்தவர், பட்டம் பெற்றவர். அவரே அதைப் புரிந்து கொள்ள மறுக்கிறார். என் கருத்துரைகளை ஜீரணிக்க அஞ்சு கிறார். அவர் மனத்திலே அண்டிக் கிடந்த அழுக்கு எண்ணங்களுக்கு ஒரு பேதிமாத்திரையாக இருந்தது என் பேச்சு. அவரது நெஞ்சில் சுட்டி கொண்டிருந்துவதுபோலவே நான் பேசினேன். எவ்வளவு தான் சீர்திருத்தக் காரியாக இருந்தாலும் ஓரளவு பொறாமையுணர்ச்சி தலை காட்டத்தான் செய்தது. ஆனாலும் என் அறிவுத் தெளிவு என்ற சம் மட்டியால்அதைஅடித்துத்தகர்த்து விட்டேன்.

பேசுந்தெய்வமே,உன்பிடிவாதத் தின் கடைசி அத்தியாயம் — உன் மருமகனுக்கு இரண்டாந்திருமணம், உன் மகள் 'சந்நியாசம்' பூணுகிறாள்! இனி அவளுக்கு அங்கு இடமில்லை. உன்னிடமும் வர விருப்பமில்லை. ஆனால் உன் மூத்த மகள் உன்னிடம் ஒரு வரம் வேண்டுகிறாள்.

என் தங்கை லீலா, ஆம் அம்மா, உன் ஆசை முழுவதற்கும் பாத்திர மான சிறுமி......அவளுடைய நல் வாழ்விலும் குறுக்கிடாதே! அவள் இராமன் என்ற கல்லூரி மாணவனை விரும்புகிறாள். அவனும் அவளை உயிரெனப் பாவிக்கிறான் அவன் கல்லூரியில் ஒரு புரட்சி முரசு — ஆகவே அரசியலாரின் குறுக்கீடும், தொல்லையும் அதிகம். இருந்தும் படிக்கிறான்.........அதற் கொரு காரணம் லீலா படித்துக் கொண்டிருக்கிறாள் என்பதுதான்! அவனை உனக்கும் தெரியும். தந்தை யார் இறப்பதற்கு முன்னால் அவன் நம் வீட்டிற்கு இரண்டுமுறை வந் திருக்கிறான். அவர்களது காதல்

[ஓடிய கதை:- சுந்தரம், தன் கல்லூரித் தோழி பத்மாவைக் காதலித்தான். அவள் பெற்றோ ரின் வற்புறுத்தலால் பார்த்திபன் என்ற வாலிபனை மணந்துகொண் டாள். காதல் தோற்றுவிட்டது. கடமை வென்றது. அந்தத் திரு மணத்திற்கு வர முடியாது வாழ்த்து மட்டும் அனுப்பினான் பத்மாவின் தங்கை, லீலாவின் இளந்தோழி மங்கை. அவள் வாழ் விலேயும்ஒரு புயல்...தெப்ப உற் சவம் பார்க்கச் சென்ற இடத்தில் தினகரனைச் சந்தித்தாள். அவனோ அவளை வஞ்சித்து விட் டான். அதிலிருந்து, வாழ்க்கை யில் வெறுப்புற்று ஆசிரியை யாகவே இருந்துவந்தாள்.

பார்த்திபனை மணந்த பத்மா தன் வாழ்வில் சுந்தர் நினைவால் படுந்துயர் தாங்காமல் தவித்தாள். மேலும்......அவன் வீட்டிலே வேலை செய்து கொண்டிருக்கும் பொன்னியோடு கள்ள நட்பு கொண்டிருந்தான். இதனை அறிந் தாள் பத்மா. அது மட்டுமா? இதற்கு பார்த்திபனின் தந்தை யும் உடந்தை. ஆகவே அவளை நேரிலேயேகேட்டாள் பொன்னி யை அவள் கணவனுக்கு மணம் முடித்து, தான் விலகிக் கொள்ள தீர் மானித்தாள்.]

வாழ்க்கையிலே சாதிப் பெயரைச் சொல்லியோ, பணத்தை அடிப்படையாகக் காட்டியோ உனது தடுப்பு வேலையைத் துவங்கி விடாதே. ஆம், என் வாழ்க்கையில் இரண்டாவது நல்ல காரியம் செய்யப் போகிறேன் என்றால் அது என் தங்கைக்குச் செய்யப்போகிற காதல் திருமணம்தான்......லீலா என்னிடம் எதையும் ஒளிக்காமல் சொல்லிவிட்டாள். தாயே, இந்த வரம் தரவேண்டுகிறேன்.

பிறகு அவரும் பேசினார். அவர் தன் தந்தையின் வார்த்தையை மீறிக் காரியங்கள் செய்வது தகாது என்று கருதினாராம். அதுமட்டுமல்ல, அவர் வாழ்க்கையில்கொண்ட இலட்சியமாம் தந்தை சொற் கேட்பது! அவர் தந்தையின் வார்த்தையைக் காப்பாற்றினார்; ஆகவே தந்தைக்கு தட்டி நடக்காத மகனானார். ஆனால் மனைவிக்குகந்த மணாளனாகவில்லை! அதை அவர் உணர்ந்திருக்க வேண்டும். குறிக்கோள் உன்னதமாக இருக்கவேண்டும் — அதையடையும் முறையும் உயர்வாக இருக்கவேண்டும். குறுக்கு வழிகளில் இறங்கி விடக் கூடாது. அவர் தந்தையின் வார்த்தைக்குக் கட்டுப்பட்டார். அது உண்மைதான். ஆனால் அவர் தந்தையின் வார்த்தைகள் எதை எதைத் தொடலாம், ஒட்டியிருக்கலாம் என்பதற்கு ஒரு வரையறை இருக்கவேண்டும். அந்தக்கால சமூக முதல்வர்கள் குறிப்பிடும் கடமைகள் காட்டு மரங்களைப்போல நாம் அவைகளை ஏற்ற உருவங்களாகச் செதுக்கியும், மழுக்கியும் மாற்றிக் கொள்ள வேண்டும். மரத்தை அப்படியே பயன்படுத்த முடியுமா? முடிந்தாலும் அது முறையாகாது. எளிதாகவும், இயற்கை விதிக்கு ஒட்டியதாகவும் இருக்காது.

சுந்தரிடம் என் இதயத்தைப பறி கொடுத்துவிட்டேன். கட்டுப்பட்டால் பார்த்திபனைக் கணவனாக ஏற்றேன். சுந்தருடன் திரை மறைவு நாடகம் நடத்தவில்லை. மனதை அடக்கிவிட்டேன். அதை அவர் செப்பவில்லை.

அவர் என்னிடம் மன்னிப்புக் கேட்டார். அம்மா! அவர்களின் குடும்பக் கௌரவம் குலையக்கூடாதாம்! பத்மா ஓடிவிட்டாள் என்று ஊர் தூற்றுமாம். இப்படி என் தீர்மானத்திற்கு ஒரு திருத்தம் கொண்டுவந்தார். ஊர் தூற்றாத முறையில் நான் நடந்துகொள்வதாக உறுதி சொன்னேன்.

சுந்தரைப்பற்றி அவர் முழுவிபரங்களை இரண்டொருதினங்களுக்கு முன்தான் அறிந்து கொண்டாராம். இவைகளை முன்னமே அறிந்திருந்தால் அவர் கோழையாக இருந்திருக்கமாட்டாராம். தந்தையோடு போராடித் தானும் பொன்னியை மணந்திருப்பாராம். அவர் முயன்று என்காதலை வெற்றி பெறச் செய்திருப்பாராம். இப்படி அவர் நடந்ததற்கு பின்னால் கதைபேசினார். நான் அவர் பேசட்டும் என்று விட்டுவிட்டு அவரது முகத்தைப்பார்த்தபடியே உட்கார்ந்து விட்டேன், அவர் தனது வாழ்க்கையில் கண்ட தோல்வியைப் பெரிதாக என்னிடம் கூறினார். ஆனால் அவர் தோல்வியடையவில்லையென்பது என் முடிவு. ஆண் இனச்சித்தாந்தமே அதுவாக இருக்கும்பொழுது அவரைமட்டும் நான் குறைகூறி என்ன செய்வது? அவர் ஊரில் உலகில் நடக்காத பெருந்தவறைச் செய்துவிடவில்லை.

இவ்வளவு பெரிய பூகம்பம் குடும்பத்தில் நடந்துவிட்டது. ஆனால் அந்த ஆட்டத்தின் சிறுகுறிகூட அந்தக் கிழவருக்குத் தெரியாது. நாங்கள் இருவருமே அவருக்கு இவைகளைத் தெரிவிக்கக்கூடாது என்று முடிவுசெய்துகொண்டோம். என் எதிரிலேயே அவர் பதிவுத் திருமணத்திற்கு எழுதிய மனுவில் பொன்னியை அழைத்து வந்துக் கையொப்பமிடச் சொன்னேன். அவள் என் காலடியில் விழுந்து 'அக்கா.....என்னை மன்னித்துவிடு' என்று அழுதாள். நான் அவள் அழுகையை மாற்றினேன். அவர் கூட 'பத்மா, நீ ஒரு தெய்வம்' என்றார்.

நான் எழுந்தேன்...

என்னைப் பெற்றெடுத்த பெருந்தேவி, என் முடிவு இது தான். அவரை ஊர் தூற்றக் கூடாது. ஆனாலும் என் துறவும் நிறைவேற வேண்டும். ஆம், தாயே, நான் நர்ஸ் வேலைக்குப் படிக்கப் போகிறேன். அதற்கு அவர் இசைந்து அனுப்புகிறார். அந்த மருத்துவத் தொழிலினால் என் மனப் புண் மாற மார்க்கம் உண்டு என்று திடமாக நம்புகிறேன் நான் பொது சேவையிலிறங்[கி] விட்டதால் பார்த்திபனின் சொந்த வேலைகளைக் கவனிக்க வேண்டு[ம்] அதற்காக என்னுடன் இருக்கி[ற] பொன்னியை நானேமணம் முடித்[து] வைக்கிறேன். இப்படி ஊருக்கு 'வெளிச்சம்'... என் மாமனாருக்கு இதே விளம்பரம்!

ஊர் இனி பேசாது. அவரும் இன்பம் அடைவார். நானும் வி[டு]தலை பெற்று விடுவேன்!

ஒரு அம்பு — கிளியும் சி[ற] கொடிந்து, அதன் வாயிலிருக்கும் தங்கக்கிண்ணியும் சேதமில்லாமல்

பார்த்திபன் சம்மதித்து விட்டா[ர்] என் யாத்திரை தொடங்கப்போகிறது. இனி நான் எட்டாத வான் முகட்டிலே என் வாழ்க்கை மாளிகையை அமைத்துக் கொள்வேன். ஆசாபாசங்கள் என்னை வந்து அண்டக் கூடாது. மன நெகிழ்ச்சிக்கு இனி 'குட்பை' போட்டாயிற்று. இனிப் பெண்—முழுப் பெண்நான்! ஆனால் பேதலிக்கும் பண்பிழந்த விசித்திர சித்தாங்கி! பார்த்திபனின் மனைவி முறை மடிந்து விட்டது. பொன்னியின் 'அக்காள்' கு[ர]லும் இனிக் கேட்காது 'என் மகளே...' என்ற அழைப்பும் மெல்லியதாகத் தான் என் செவிகளில் வந்து விழும். இனி நான் தாய்...... ஒரு குழந்தைக்கு என்ற குறுகிய மனபபான்மையில் அல்ல! இந்தப் பரந்த பூமியில் வாழும் எல்லோருக்கும் தாய்! லோகமாதா! ஆம், துன்பத்தால் தாக்கப் பட்டுத் தவிப்பவருக்கெல்லாம் என் உதவிகளைச் செய்வேன். என்னை மட்டும் இனி காதலும் ஆளாது, கடமை யென்ற கட்டுப் பாடும் நெருங்காது. கருணை எனக்கு வழிகாட்டி. இரக்கம் என் பக்க துணை—பிறரின் சோகத்தை விரட்டல் என் தொண்டு, அவர்கள் காணும் சுகம் எனக்கு கைம்மாறு!

அன்னையே, உன் மகள் எட்டாத அடிவானத்தில் இன்று போய் நிற்கிறாள். அவள் இலட்சியமும் அப்படியே! அவள் வாழ்க்கை இனியாவது அவள் எண்ணம் போல நடைபெற வேண்டும் என வாழ்த்து— தடைசெய்ய நினைக்காதே. தோற்று விடுவாய்.

(தொடரும்)

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஈரோடு மாநாடு என்றவுடன் க்கம் பீறிடுகிறது.

மாநாட்டிற்கு மக்கள் வந்து காண்டிருக்கிற நேரத்தில், மாநாட் ன் வரவேற்புக்குழுத் தலைவர் தாழர் எஸ். ஆர். சந்தானம் அவர் ளின் தந்தைபாரின் ஆவிபிரிந்தது!

துக்கத்தினிடையே மாநாடு, ருந்தும் மாநாடு வெற்றிகரமாக டந்தது!

ஈமக்கடன் முடிந்ததும், தோழர் ந்தானம் மாநாட்டுப் பந்தலுக்குள் ழைந்திடும் கோலம், கூடியிருந் தார் முகத்திலே கவலையைத் தந் ாலும், அவரின் இலட்சிய ஆவே த்தைக் கண்டுகளிப்பும் அரும்பத் ான் செய்தது!

அவருடன் ஒத்துழைத்த அப் பாவு, ஆர். டி. முத்து, பெருமாள், ற்றுமுள்ள இயக்கவீரர்கள் அனை ருமே, வாழ்த்துதலுக் குரியவர் ள். இந்த மாநாட்டின் வெற்றியில் பெரும்பங்கு, நம் அருமைத் தோழர் ஈ. வே. கி. சம்பத் அவர் ளையே சாரும்.

மாநாடுகள், இரண்டு தனிப்பிரச் சினைகள் குறித்து, இரண்டு இடங் களில் நடத்தப்பட்டன.

இரண்டும் மிக மிக போற்றுத லுக்குரிய முறையில் நடைபெற் றுள்ளன.

இந்த வெற்றியிலே கலந்து கொண்ட எல்லோரும் நம் அரும் திராவிடத்தின் விடுதலைப்படையின் தளபதிகளென எண்ணும்பொழுது கவலைபோய் களிப்படைகிறோம். அவர்கள் வாழ்க என வாழ்த்து கிறது நா! அவர்கள் தொகைவளர்க என வேண்டுகிறது மனம்!

மூடக்கொள்கைகள் வலுவிழந்து சாகின்றன என்ற செய்தி கேட்டு நாம் களிக்கிறோம். அவைகளை சாக டிக்கும் வீரர்கள் நிறைந்த பாசறை நம் இயக்கம் என்று நாடு கூறுகிற நிலை பிறந்திடக்காண நம் கவலை யொழிந்து களிப்பு மிகுகிறது.

ஆகவே கவலைதீர வழி கிடைத்து விட்டது! களிப்பு பெருகும், இனி!

சர்க்கார் கடமை

தேனியில் 4—7—51ல் நடந்த திராவிட முன்னேற்றக் கழக கூட் டத்தில், அவ்வூர் காங்கிரஸ் குண் டர்களால், திட்டமிடப்பட்டு, தடி, கல், இன்னும் பல பயங்கர ஆயுதங் களைக் கொண்டு கலகம் விளைத்த சம்பவம், தமிழ்நாடு முழுவதும் மனக் கொதிப்பையுண்டாக்கியிருக் கிறது. காங்கிரஸ் காலிகள் அஹிம்சை, மகாத்மா காந்தி, பாரத மாதா என்ற பெயரால்செய்த அக்கிர மம்போதாதென்று சட்டத்தையும், அமைதியையும் நிலைநாட்ட, தக்க முறையில் நடவடிக்கை எடுத்து வெற்றிகரமாக நிலைமையை சமா ளித்த போலீஸ் அதிகாரிகள் சஸ் பெண்ட் செய்யப்பட்டதுடன் விசாரணைக்கும் ஆளாக்கப்பட்டுள் ளனர். மேலும் அவர்களால் கைது செய்யப்பட்டிருந்த கலகக்காரர் களுக்குப் பரிந்துகொண்டு சர்க்கார் வருவதைப் பார்க்கும்பொழுது, இனி, இம்மாதிரி சம்பவங்கள் அடிக்கடி, இன்னும்பெரிய அளவில் வரும் பொதுத் தேர்தலுக்குள் ஏற்படும் என்றே தெரிகிறது. இன் றைய ஆளவந்தாருக்கு எதிர்க்கட்சி களாக உள்ளவைகளை அடக்க, மிக வும் வெறுக்கத் தக்க மூர்க்கத் தனமான நடவடிக்கைகளில் நம் பிக்கையிழந்த காங்கிரஸ் ஈடுபட வேண்டியதாகிவிட்டது. இம்மாதிரி சம்பவங்கள் பல ஏற்படுவது கடைசியில் பாசீச பாதைக்கே அழைத்துச் செல்லும். ஆகவே, மக்கள் இம்மாதிரி கொடுமைகளைத் தாங்கிக்கொண்டால், தங்களின் அடிப்படை உரிமைகளையே இழக்க நேரிடும் என்பதையுணர வேண்டும். இச் சம்பவத்தைப் பற்றி விசாரித்து, குற்ற வாளிகளைத் தண்டித்து, சஸ்பெண்ட் செய்யப்பட்ட அதிகாரிகளுக்கு நியாயம் வழங்கிட உத்தியோகஸ்த ரல்லாத விசாரணைக் குழு ஏற் படுத்துவது சர்க்காரின் கடமை. இலாக்கா விசாரணையினால் மக்களை ஏமாற்ற முடியாது. அது காங்கிரஸ் காரர்களின் வெறியாட்டம், சர்க்காரின் அதிகாரத் துணை யுடன் நடைபெற வழி செய்வதற்கே உதவும்.

வி. சர்க்கரை, தலைவர்
அனைத்திந்தியதொழிற்சங்க காங்கிரஸ்

முக்கிய அறிவிப்பு

"ஏழை—எரிமலை" என்ற ஒரு சிறு புத்தகம் என் பெயரில் வெளி யிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்ததும், மிகவும் ஆச்சரிய மடைந்தேன். அதில் மூன்று கட்டு ரைகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. முதல் கட்டுரையான "ஏழை—எரி மலை" என்பது நானெழுதியதல்ல; 'திராவிடநாட்டில்' வெளிவந்தது, கட்டுரை எழுதியவர்களிடமோ, அவை வெளிவந்த பத்திரிக்கை யாளர்களிடமோ, எத்தகைய அனு மதியும் பதிப்பாளர்கள் பெற்ற தாகத் தெரியவில்லை. மேலும் ஒரு வர் எழுதிய சிறந்த கட்டுரையை மற்றொருவர் பெயரில் தவறாக வெளியிடப் பட்டிருக்கிறது.

இதைக் குறித்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்க, வழக்கறிஞர் ஒருவரிடம் நான் ஆலோசனை கேட் டிருக்கிறேன். அவர் மூலம் விரை வில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

இரா. செழியன்

பாவலர் விடுதலை

கும்பகோணம் கூட்டுக் கொள்ளை வழக்கில் பாவலர்—பாலசுந்தரம் 4-வது எதிரியாகச் சேர்க்கப்பட்டு 17—7—50-ல் கும்பகோணம் செஷன்ஸ் நீதிபதி அவர்களால்பாவ லருக்கு 3-வருஷ கடுங்காவல் தண் டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் அவர் அப்பீல் செய்து 2-8-51-ல் நீதிபதி A. S. P. அய்யர் அவர் களால் பாவலர் குற்றவாளி அல்ல எனத் தீர்மானிக்கப்பட்டு பாவலர் விடுதலை அடைந்தார்.

படித்தீர்களா?

தித்திக்கும் தமிழில்......
தென்றல் நடையில்......
சிந்தனைக்கு விருந்து!

ஞாயிறு

மாதமிருமுறை 1, 15 நாட்களில் வெளிவந்துகொண்டிருக்கிறது.
ஆசிரியர்கள்: ஏ. கே. வேலன்
தாமரைச்செல்வன்
விபரங்கட்கு:— ஞாயிறு
கரந்தை, தஞ்சை.

பருத்தி மாலை தரித்தவர்!

—✲✲—

பஞ்சத்திற்கு ஒரு மந்திரி இருக்கிறார். இது உலகத்திலே எட்டாவது அதிசயம்! அதுவும் அந்த மந்திரி யார் டெல்லியில் இருக்கிறார் என்றால், ஆச்சர்யத்தால் மூர்ச்சையாகி விடுவீர்கள்!

அவர்தான் நம் மரமந்திரி கனம் முன்ஷியார்!

அவர் ஒருவனுக்கு உணவில்லையெனில் ஜகத்தினையழித்திடுவோம் என்று முழங்கிய தேசியத் திருவாளர்கள் பராக்கு கூற பவனி வந்தார், இங்கு!

அவர் கோவைக்கு வந்திருந்த பொழுது கருப்புக் கொடி காட்டினர், நம் கழகத் தோழர்கள்.

அவர் பேசிய கூட்டத்தில், அவருக்கு வரவேற்பும் அளித்திருக்கின்றனர், நம்மைப்போல நெசவாளர்களும்!

நாம் கருப்புக் கொடி காட்டினோம்! நெசவாளர்கள், அவருக்கு கருப்புக் கொடி காட்டவில்லை! மேலும் ஒருபடி மேலே சென்று விட்டனர்.

அவர் நாட்டு மக்கள் பசியால் வாடும்பொழுது என்ன குறிப்பிட்டார், தெரியுமோ! நமக்குச் சொல்ல பயமாயிருக்கிறது! அவர் துணிந்து சொன்னார், பருத்திக் கொட்டையிலே கூட உணவு சத்து இருக்கிறதென்று!

எவ்வளவு நெஞ்சுத் துணிவு, இந்தப் பஞ்ச மந்திரிக்கு! கொஞ்சமும் நெஞ்சில் பயமின்றி கூறினார்.

இதனை மறக்கவில்லை, நெசவாளர்கள் ஆகவே, பருத்திக் கொட்டையிலே மாலை செய்தனர், மரமந்திரிக்கு, அதனை அணிவித்தனர்.

அந்த பருத்திமாலையழகர் அன்று அருளிய திருவாக்குகள் இன்னமும் வேதனையாகவுமிருக்கின்றன, விலா நோகச் சிரிக்கவும் வைக்கக் கூடியன.

மரம் நடுவதென்றாலே, அவருக்குப் பைத்தியமாம்! காளை மாட்டுப் பிரியர் வின்ஸிலித்கோ போல, இவர் மரமந்திரி.

அது மட்டுமா? இன்னும் ஒரு யோசனையும் அவருக்கு உதயமாகியுள்ளது.

கடிதங்கள் எழுதும்பொழுது, உங்கள் உண்மையுள்ள (Truly) என்று எழுதுவதற்குப் பதிலாக, உங்கள் மரமான (Treely) என்று எழுத வேண்டுமாம்! இப்படி உத்திரவு பிறந்தாலும் ஆச்சர்யப்படுவதற்கில்லை.

குரங்கு கையிலே மாலை! அது எந்த நேரத்தில் என்ன செய்யுமென்று யார் கண்டார்கள்?

முன்ஷியாரிடம், உணவு இலாக்காவும் அப்படித்தான் மாட்டிக் கொண்டு தவிக்கிறது.

பருத்தி மாலையழகர் அவர்! அவர் போக்கே, போக்கு! யார் கண்டார்கள்?

பஞ்ச மந்திரியார், இப்படி விசித்திரமான திட்டங்கள் பலப்பலதந்து கொண்டேயிருக்கிறார்.

கடிதங்கள் எழுதும் பொழுது, உங்கள் மரமான என்று எழுதச் சொல்கிறாரே, இத்தகைய மர மண்டையுண்டோ என்று கேட்கத் தானே தூண்டுகிறது!

ஆனாலும்துணிந்து சொல்லி விடுகிறார், எதையும்!

மரங்களை நடு என்றாரே, மக்கள், மரமாகாமல், மனிதர்களாக இருக்கும் பொழுதே!

தண்ணீர் கண்டு பிடிக்க, மகான் துணை நாடினாரே, நாமெல்லாம் விஞ்ஞான உலகத்திலே வாழ்கிறோம் என்று பெருமை பேசுகிற நாளில்!

அவருக்கு, இந்தபோக்குகூடாது என்று எடுத்துக் கூறிட ஒரு விண்ணப்பம் அனுப்பிடுவோம், உங்கள் மரமான பொது மக்கள் என்று கையொப்பமிட்டு என்று கூற தோன்றுகிறது.

பருத்தி மாலை தரித்தவரின், விசித்திர விளையாட்டை யாரே வருணிப்பர்!

✲

சேலத்தில் நெசவாளர் மாநாடு

சேலம் பிரபாத் டாக்கிஸில் 2—9—51ல் கைத்தறி நெசவாளர் மாநாடு, சென்னை மாகாணக் கைத்தறி நெசவாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரகடகோட்டை அவர்கள் தலைமையில் நடைபெறும்.

தோழர்கள் சி. என் ஏ. பன்னீர் ராஜு, ஏ. சித்தையன், ஈ. வே. கி. சம்பத், காஞ்சி. மணி மொழியார், என். வி. நடராசன், இரா. நெடுஞ் செழியன் எம் ஏ., எம். எஸ் இராம சாமி, மற்றும் பலர் கலந்துகொள்வர்.

கே. கே. பூர்ணையா, வரவேற்பு கழகத்தலைவர். பி, கே. வரதராஜு மாநாட்டுச் செயலாளர்.

சிறந்த நூல்கள்

★

சி. என். ஏ.

ஆலையூரார் உபதேசம்	0—12—
ஓய்வு நேரம்	0—1—

மு. கருணாநிதி

நச்சுக் கோப்பை	0—12—
உணர்ச்சி மாலை	0—8—
சங்கிலிச்சாமி	0—8—
தலைமையுரை	0—2—

இராதாமனாளன்

பெண்	0—8—
களபலி	0—6—

அரங்கண்ணல்

வியர்வை விருந்து	0—6—

தனலன்

அழகு நிலா	1—0—
செல்வ குமாரி	1—0—
லீலாராணி	0—8—

தில்லை-வில்லாளன்

மனப்போர்	1—0—

சேரன்

கட்டழகி காஞ்சனா	1—4—

வியாபாரிகளுக்கு மட்டும் 25சத கழிவு உண்டு. அனுப்பும் செலவு இலவசம்.

பாரி நிலயம்

(A.) 59, பிராட்வே, சென்னை, 1

Edited, Printed & Published by C. N. Annadurai M. A at "DravidaNadu" Press
95, Tirukkachinambi Street Kancheepuram.